# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண்.283/பேரூ/2023
நாள். 27.10.2023

திரு. ஆர்.மயில்சாமி,
புதுவிளாங்குடி,
மதுரை மாவட்டம். ... மனுதாரர்

செயல் அலுவலர்,
வாடிப்பட்டி பேரூராட்சி ,
மதுரை மாவட்டம். .... எதிர்மனுதாரர்

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், பிளாட் 5, அய்யப்பன் தெரு என்ற முகவரியைச் சேர்ந்த திரு. ஆர்.மயில்சாமி என்பவரது 09.09.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.09.2023 அன்று பெறப்பட்டு, 283/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், பிளாட் 5, அய்யப்பன் தெரு என்ற முகவரியைச் சேர்ந்த திரு. ஆர்.மயில்சாமி, என்பவர் தனது மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், வாடிப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியான திண்டுக்கல் சாலையில் மாதாகோவில் அருகில் தனலெட்சுமி ராமசாமி அரங்கம் என்ற பெயரில் திருமண மண்டபம் உள்ளது. இம் மண்டபத்திற்கு வாகனம் நிறுத்துவதற்கு (Parking spae) இடம் விடாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டடம் கட்டப்பட்டுள்ளதால் விசேஷ காலங்களில் வரும் இரு சக்கர வாகனங்கள், மூன்று சக்கர வாகனங்கள் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் சாலையில் நிறுத்துவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. மேலும் இம்மண்டபத்திற்கு

அருகில் புகழ்பெற்ற மாதாகோவில் உள்ளது. இக்கோவிலுக்கு வெளி நாட்டவர்கள், வெளி மாநிலத்தவர்கள், வெளி மாவட்டத்தை சேர்ந்தவர்கள் தினந்தோறும் இத்திருக்கோவிலுக்கு வருவதினால் மிகக்கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதினால் இவ்வழியே செல்லும் கல்லூரி மற்றும் பள்ளி பேருந்துகள் குடிநீர் வாகனம் மற்றும் பேருந்துகள், போக்குவரத்து நெரிசலில் சிக்கி செல்லுவதனால் விபத்துக்களும் ஏற்பட்டு வருகிறது. மேலும் மேற்படி தனலெட்சுமி ராமசாமி திருமண மண்டபம் அனுமதிக்கு மாறாக கூடுதலாக கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

தனலெட்சுமி ராமசாமி திருமண மண்டப கட்டடம் நான்குபுறமும் இடைவெளி இடம் (Set back Spaces ) விடாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டடம் கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது. காவல்துறை, தீயணைப்பு (மற்றும்) மீட்பு பணி துறையிடம் தடையில்லா சான்றும் பெறவில்லை. இது குறித்து 28.08.2023 நாளிட்ட புகார் மனுவினை பதிவு தபாலில் செயல் அலுவலர் வாடிப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி அலுவலர்களுக்கு அனுப்பி இருந்தும் எந்தவொரு நடவடிக்கை எடுக்காமல் திருமண மண்டபஉரிமையாளருக்கு சாதகமாக செயல்பட்டு வரும் செயல் அலுவலர் மீது துறைரீதியிலான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

"தனலெட்சுமி அரங்கம்" திருமண மஹாலுக்கு வாகனம் நிறுத்துவதற்கு நான்குபுறமும் இடைவெளி இடம் (Set back spaces) இடம் விடாமலும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கான கட்டடம் என்பதால் 1973ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 33-ன்படி அக்கட்டத்திற்கு நகர் மற்றும் ஊரமைப்பு திட்ட இயக்ககத்தின் ஒப்புதல் பெறாமலும் மற்றும் தமிழ்நாடு பொதுகட்டடம் (உரிமம்) பெறாமலும் சட்டத்திற்கு புறம்பாக செயல்பட்டு வரும் "தனலெட்சுமி ராமசாமி" அரங்கத்தை நகர் ஊரமைப்பு சட்டம் 1971-ன் பிரிவுகள் 56(1) மற்றும் 57-ன் உடன் படிக்கப்பட்ட பிரிவு 85 கீழ் stop work notice Notice calling for approved plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்படவேண்டிய மூடிமுத்திரையிட்டு Lock and seal and demolition வழங்கி மற்றும் விரைவான அமலாக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை மிகவும் பணிவன்புடனும், தாழ்மையுடனும் வேண்டிக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 26.09.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் வாடிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

**3) வாடிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தனது 05.10.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-**

"வாடிபட்டி பேரூராட்சி மாதாகோவில் அருகில் உள்ள தனலெட்சுமி ராமசாமி அரங்கம் கட்டட விதிமுறைகளை மீறி கட்டடம் கட்டியுள்ளதாகவும் மேலும் வாகனங்கள் நிறுத்துவதற்கு இடவசதி இல்லாமல் இருப்பதாகவும் இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாக தெரிவித்து நடவடிக்கை மேற்கொள்ள மனுதாரரால் புகார் மனு வழங்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து மேற்காணும் அரங்கம் தலஆய்வு செய்யப்பட்டது. மேலும் கோப்புகள் ஆய்வு செய்யப்பட்டதில் வாடிப்பட்டி பேரூராட்சி கட்டட வரைபட அனுமதி எண்.6/2015-2016 நாள் 12.05.2015ன்படி வார்டு எண். 17 சர்வே எண். 323/1a1c ன்படி தரைத்தளம் 182 ச.மீ பரப்பளவில் வணிகக் கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இடம் தலஆய்வு செய்யப்பட்டதில் அரங்கத்தின் வடபுறம் உள்ள காலியிடத்தில் 7 முதல் 8 வாகனங்கள் நிறுத்துவதற்கு இடவசதி செய்துதரப்பட்டுள்ளது; மேலும் போக்குவரத்து நெரிசல் ஏற்படாதவாறு

வாகனங்களை நிறுத்தவும் தவறும் பட்சத்தில் தங்களது உரிமம் இரத்து செய்யப்படும் எனவும் கட்டட உரிமையாளரை அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தற்போதைய நிலையில் வாடிப்பட்டி பேரூராட்சி வரித்தண்டலரால் மேற்படி ராமசாமி தனலெட்சுமி கூட்ட அரங்கினை களஆய்வு செய்யப்பட்டதில் பின்வரும் விபரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | கட்டட வரைபட அனுமதி வழங்கப்பட்டது (சதுர அடி) | கட்டப்பட்டுள்ள கட்டடத்தின் அளவு (ச.அடி) | கூடுதலாக கட்டியுள்ள கட்டடத்தின் அளவு (ச.அ) |
|---|---|---|---|
| 1 | 1950 | 2809 | 859 |
| 2 | – | 2704 | 2704 |

கட்டட வரைபட அனுமதி வழங்கிய அளவினை காட்டிலும் கூடுதலாக 859 சதுர அடி அளவிற்கு கட்டடம் கட்டப்பட்டுள்ளது என்று கண்டறியப்பட்டுள்ளது. மேலும் நகர் ஊரமைப்பு சட்ட விதிமுறைகளின்படி உரிய அனுமதி பெறாமல் கட்டடம் கட்டப்பட்டுள்ளது என தெளிவாக தெரிய வருகிறது. எனவே நகர் ஊரமைப்பு சட்ட விதிமுறைகளின்படி அனுமதி பெறாமலும் பேரூராட்சி மூலம் அனுமதி வழங்கியுள்ள அளவினை விட கூடுதலாக கட்டடம் கட்டப்பட்டுள்ள விதிமீறல்கள் சம்பந்தப்பட்ட ராமசாமி தனலெட்சுமி மஹால் உரிமையாளருக்கு அறிவிப்பு மீறி நிகழ்ச்சிகள் ஏதும் நடத்தக்கூடாது எனவும், உரிய நகர் ஊரமைப்பு துறையின் அனுமதி பெற்று உடனடியாக சமர்ப்பித்திட அறிவுறுத்தப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது "என்று தெரிவித்துள்ளார்.

(4) மனுதாரரும் மற்றும் எதிர்மனுதாரரான வாடிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரும் 06.10.2023 அன்று திருநெல்வேலி முகாமில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 26.09.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) 06.10.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:–

" மதுரை மாவட்டம், வாடிப்பட்டி பேரூராட்சியில் மாதா கோவிலுக்கு அருகில் தனலெட்சுமி ராமசாமி அரங்கம் என்கின்ற பெயரில் திருமண மண்டபம் இயங்கி வருகின்றது. இம்மண்டபம் வாகன நிறுத்துமிடம் இல்லாமல் கட்டப்பட்டுள்ளது. இதனால் இம்மண்டபத்திற்கு.திருமணம் போன்ற விசேஷத்தில் கலந்துக்கொள்ள வருகை தரும் மக்கள் தங்களது 2 சக்கரம் மற்றும் 4 சக்கர வாகனங்களை சாலையிலேயே நிறுத்திச் செல்கின்றனர். இதனால், அங்கு போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வாகன ஓட்டிகள் மிகவும் சிரமப்படுகின்றனர். மேலும் மேற்கண்ட திருமண மண்டபம் அனுமதிக்கு மாறாக கூடுதலாக கட்டப்பட்ட கட்டடமாகும். மேலும் அம்மண்டபத்தின் நான்குபுறத்திலும் விதிகளின்படி போதுமான இடைவெளி விடாமல் கட்டப்பட்டுள்ளது. பொது மக்கள் பயன்பாட்டிற்கான கட்டடம் என்பதால் அம்மண்டபத்திற்கு 1973ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டப் பிரிவின் படி நகர் மற்றும் ஊரமைப்பு திட்ட இயக்ககத்தின் ஒப்புதல் பெறவில்லை.

எனவே சட்ட விதிகளுக்கு மாறாக செயல்பட்டு வரும் மேற்கண்ட தனலெட்சுமி ராமசாமி அரங்கம் என்கின்ற திருமண மண்டபத்தின் மீது நகர் ஊரமைப்பு சட்டம் 1971

பிரிவுகள் 56 மற்றும் 57ன்படி நடவடிக்கையினை பேரூராட்சியால் எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இதுபோன்ற விதிகளுக்கு மாறாக கட்டப்பட்டுள்ள கட்டடங்களின் மீது அமலாக்க நடவடிக்கை எடுப்பது தொடர்பாக வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறையால் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண் 7 நாள் 10.1.2023 –ன் நகலினை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**6)** வாடிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் **06.10.2023** அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தமது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"மதுரை மாவட்டம் வாடிப்பட்டி பேரூராட்சி மாதா கோவில் அருகில் உள்ள தனலட்சுமி ராமசாமி அரங்கம் கட்டடம் விதிமுறைகளை மீறி கட்டப்பட்டுள்ளது குறித்த புகார் மனுவையொட்டி மேற்கண்ட அரங்கம் ஆய்வு செய்யப்பட்டது. அரங்கத்தின் வடபுறம் உள்ள காலியிடத்தில் அரங்கத்திற்கு வரும் வாகனங்கள் நிறுத்தப்படுகின்றன. மேலும் அங்கு நிறுத்தப்படும் வாகனங்களால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதையொட்டி, கட்டட உரிமையாளருக்கு அங்கு போக்குவரத்து நெரிசல் ஏற்படாதவாறு வாகனங்களை நிறுத்தவும், தவறும் பட்சத்தில் அரங்கத்திற்கான உரிமம் ரத்து செய்யப்படும் எனவும் 25.5.2023 அன்று தாக்கீது வழங்கப்பட்டுள்ளது என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மேற்கண்ட அரங்க கட்டடத்திற்கு வழங்கப்பட்ட அனுமதியைக் காட்டிலும் கூடுதலாகக் கட்டடம் கட்டப்பட்டுள்ளதையடுத்து, அக்கட்டடத்தில் நிகழ்ச்சிகளை நடத்திட தடை செய்து 25.9.2023 அன்று Notice வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மேலும் Town and Country Planning Act-படியும், வீட்டுவசதித் துறையால் வெளியிடப்பட்டுள்ள அரசாணை எண் 7, நாள் 10.1.2023ன்படியும் Lock and Seal தாக்கீது, De-occupation தாக்கீது மற்றும் அதன் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பாக இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் எனது 5.10.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம், வாடிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் (மற்றும்) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:–

<u>பிரிவு " 7 " The Ombudsman shall perform all or any of the following functions, namely –</u>

7 (c) <u>where the irregularity is due to willful negligence or dereliction of duty of any officer or employees of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும், இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.</u>

மனுதாரர் திரு. ஆர். மயில்சாமி என்பவர் தனது 09.09.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் வாடிப்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட மாதா கோவிலுக்கு அருகில் தனலட்சுமி ராமசாமி அரங்கம் என்கிற பெயரில் திருமண மண்டபம் கட்டடமானது போதிய இடைவெளியின்றி பேரூராட்சி கட்டட அனுமதிக்கு மாறாக விதிமீறி கூடுதல் கட்டடம் கட்டப்பட்டுள்ளது எனவும் மற்றும் வாகன நிறுத்துமிடம் இல்லாமல் கட்டப்பட்டுள்ளதாகவும் புகார் தெரிவித்துள்ளார்.

வாடிப்பட்டி பேரூராட்சியின் 12.05 2015 நாளிட்ட கட்டட அனுமதி ஆணையில் மனுதாரர் தெரிவிக்கும் தனலெட்சுமி ராமசாமி அரங்கக் கட்டடத்திற்கு 1950 சதுர அடியில் கட்டடம் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரரின் புகார் மனு வரப்பெற்றதும், நகராட்சியினரால் தலஆய்வு செய்ததில் பேரூராட்சியின் அனுமதிக்கு மாறாக 2809 சதுர அடியில் கட்டப்பட்டுள்ளதன் மூலம் கூடுதலாக அமைதியின்றி 859 சதுர அடி கட்டப்பட்டுள்ளது எனவும், மேலும் பேரூராட்சியால் அனுமதி அளிக்காத நிலையில் 2704 சதுர அடியில் கூடுதலாக கட்டடம் முறைகேடாக கட்டப்பட்டுள்ளது என தெரிய வருகிறது என்பதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை வாயிலாக தெரிய வருகிறது.

வாடிப்பட்டி பேரூராட்சியில் கட்டப்பட்டுள்ள தனலெட்சுமி ராமசாமி அரங்கம் நகர் ஊரமைப்புத் துறையின் வரைபட அனுமதியின்றியும், வாடிப்பட்டி பேரூராட்சியின் கட்டட அனுமதியின்றியும் விதிமீறி கட்டப்பட்டுள்ள கட்டடங்களுக்கு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையால் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண். 07 நாள் 10.01.2023ல் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 56,57 மற்றும் 80 (A)ன் கீழ் அனுமதியற்ற அபிவிருத்திகள் மீதான அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் வழிமுறைப்படுத்துதலுக்கான விதிகளை பின்பற்ற வேண்டிய வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளதன்படி, உரிய நடவடிக்கை மேற்கொண்டு அதன் அறிக்கையை இம்முறைமன்ற நடுவத்திற்கு 45 நாட்களுக்குள் அனுப்பி வைத்திடுமாறு வாடிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்த இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும், வாடிப்பட்டி பேரூராட்சியால் 12.05.2015 நாளிட்ட கட்டட அனுமதி ஆணையில் புகாருக்குள்ளான தனலெட்சுமி ராமசாமி அரங்க கட்டடத்திற்கு 1950 சதுர அடியில் கட்ட அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால் மேற்காணும் கட்டடப்பணி முடிவுற்றதும் வாடிப்பட்டி பேரூராட்சியின் அலுவலர்களால் கட்டடத்தை ஆய்வு மேற்கொள்ளாமல் தற்போது மனுதாரர் புகாராக தெரிவிக்கும் சமயத்தில் அவசர அவசரமாக மேற்படி கட்டடத்தை தலஆய்வு செய்து, கட்டட உரிமையாளரால் மேற்படி கட்டடத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டதைவிட விதிமீறி கூடுதல் கட்டடம் கட்டடப்பட்டுள்ளது என தெரிய வருகிறது என வாடிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்திருப்பதன் மூலம் பேரூராட்சி

செயல் அலுவலர், பொறியாளர் மற்றும் வரைபட ஆய்வாளர் உட்பட பேரூராட்சியின் எவ்வித அலுவலர்களும் அவ்வப்போது கட்டடம் கட்டடப்பட்டு வருவதை ஆய்வு செய்யாமல், பணியில் மெத்தனத்துடனும், உள்நோக்கத்துடனும் பொறுப்பற்ற முறையில் செயலாற்றி உள்ளனர் என்பதை தெள்ளத்தெளிவாக தெரியவருகிறது. இவ்வாறு இந்நேர்வில் கடமை தவறி பணியாற்றியுள்ள வாடிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர், பொறியாளர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீது உரிய விதிகளின்கீழ் துறைரீதியான கடுமையான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு, அக்டோபர் 27–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. R.மயில்சாமி
பிளாட் 5, அய்யப்பன் தெரு,
செம்பருத்திநகர்,புதுவிளாங்குடி,
மதுரை–18.

2) செயல் அலுவலர்,
வாடிப்பட்டி பேரூராட்சி ,
மதுரை மாவட்டம்.

3) பேரூராட்சிகளின்இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை –600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்
02/11/2023

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032